IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT, UDHAGAMANDALAM) SESSIONS JUDGE OF THE NILGIRIS AT UDHAGAMANDALAM.

| | |
|---|---|
| Sessions | Spl.S.C. 63/2022 |
| | Prosecution |
| Deposition of witness for | LW 5 PW 5 |
| Name | பிரவின் |
| Father’s Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Mobile No. | |
| Email I.D | |

உதகமண்டலம் மகிளா நீதிமன்றத்தில் 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 10 ஆம் நாள் மனுதாரர் / எதிர்மனுதாரர் என்பவரின் சாட்சியாகிய PW 5 -ன் வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டு 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திரு.கே.லிங்கம்., பி.எஸ்சி., எம்.எல்., நீதிபதி, குடும்பநல நீதிமன்றம், அமர்வு நீதிபதி, மகிளா நீதிமன்றம் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

**10.09.2024.**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>:-**

நான் தற்போது கொலப்பள்ளி, பள்ளிச் சாலையில் வசித்து வருகிறேன்.

இவ்வழக்கின் புகார் தாரரான ராணி மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவன் ஆகியோர் எனது வீட்டில் இருந்து சுமார் 500 மீட்டர் தூரத்தில் வசித்துவருகிறார்கள். இந்த வழக்கின் பாதிக்கப்பட்ட சிறுவன் சற்று மனநிலை பாதிக்கப்பட்ட சிறுவனாவார். கடந்த 15.09.2021 அன்று மாலை நேரத்தில் சுமார் 5.00 மணியளவில் மாரியம்மன் கோவில் அருகே சமுதாய கூடத்தில் நான் எனது நண்பர்கள் பெரியப்பு என்ற சத்தியசீலன் மற்றும் கார்த்திக் ஆகியோர் கபடி விளையாடிக்கொண்டிருந்தோன். இந்த வழக்கின் பாதிக்கப்பட்ட சிறுவன் அழுது கொண்டிருந்தார். அப்போது எனது நண்பர் சத்தியசீலன் அவரிடம் என்ன என்று கேட்டார். அப்போது இந்த வழகின் எதிரியான சுப்பிரமணியன் அவரது வீட்டிற்கு பாதிக்கப்பட்ட சிறுவனை கூட்டி போயி அவரது ஆண் குறியை எடுத்து பாதிக்கப்பட்ட சிறுவனின் வாயில் வைத்ததாக சிறுவன் என்னிடம் சொன்னார். பின்னர் சுமார் கால் மணி நேரத்தில் சிறுவனின் அம்மா வேலை முடித்த பின் அந்த வழியாக வந்தார் அவரிடம் சத்தியசீலன் சிறுவன் சொன்ன விவரங்களை அவரிடம் சொன்னார். பின்னிட்டு சாட்சி சத்தியசீலன் பாதிக்கப்பட்ட சிறுவன் அவரது அம்மா ஆகியோர் காவல் நிலையம் சென்று புகார் எழுதி கொடுத்தார்கள். இவ்வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தார்.

<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:-</u>

பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு சரியாக பேசத் தெரியாது என்றால் சரிதான். அவர் கூறுவதை குறிப்பால் தான் உணர்ந்து கொள்ள முடியும் என்றால் ஓரளவிற்கு பேசுவார். பாதிக்கப்பட்ட சிறுவனின் அம்மாவிற்கு நாங்கள் தகவல் தெரிவித்தோம். பாதிக்கப்பட்ட சிறுவனின் அப்பாவிடமோ அவரது உறவினரிடமோ நாங்கள் எதுவும் தகவல் தெரிவிக்கவில்லை. இந்த வழகின் பாதிக்கப்பட்ட சிறுவனின் அம்மாவிற்கு

எழுத படிக்க தெரியாது என்பதால் சத்திய சீலன் எழுதி கொடுத்தார். புகாரில் நான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. இந்த வழக்கின் சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும் போலிசார் சொல்லி கொடுத்ததின் பெயரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:-

Sd/- Pravin/

Typed down to my dictation, in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/ Thiru. K. Lingam/
(FAC) Sessions Judge,
Magalir Neethimandram,
(FTMC), Udhagamandalam.